1981 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அமைச்சர்களும் அந்தந்தத் துறையைப் பற்றிய, ஆற்றிய பணிகளையும் ஆற்ற வேண்டிய பணிகளையும் சிறப்பாக எடுத்துத் தெரிவித்தார்கள். தாங்களும் இந்தச் சட்டமன்றத் துறையின் சார்பாக ஆற்றப்பட்ட பணிகளையெல்லாம் இங்கே பட்டியல் போட்டு சிறப்பாகக் காட்டியிருக்கிறீர்கள். அதற்காக அவைத் தலைவருக்கு இந்த மன்றத்தின் சார்பாக, அனைத்து உறுப்பினர்கள் சார்பாக, உளங்கனிந்த நன்றியை, அனைவரின் சார்பாக நான்தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையொலி) இங்கே ஆக்கபூர்வமான பணிகள் என்ன, என்ன நடைபெற்றன என்பதை எல்லாம் தெளிவாக தங்களுடைய பட்டியல் அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து இந்த மன்றம் தன்னுடைய நோக்கத்தை, குறிக்கோளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களுடைய ஒத்துழைப்புத் தொடர்ந்து இருக்கும் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையில் இந்த ஒத்துழைப்பை நாங்கள் அனைவரும் சேர்ந்து தருவோம் என்கின்ற உறுதிப்பாட்டினைத் தெரிவித்து மீண்டும் உங்களுக்கு இந்த அவையின் சார்பாக, அனைவருடைய சார்பாக நன்றியைத் தெரிவித்து, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

> ''பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11. பேரவைமுன் வைக்கப் பெற்றஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

286. தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குச் சட்டத்தின் விவர அட்டவணையில் சில அத்தியாவசியப் பொருட்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் விதி ஒன்றினை உருவாக்குவது குறித்து உணவு கூட்டுறவுத் துறையின் 16-12-1980ஆம் தேதியிடப் பெற்ற 695 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/195) 27 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

287. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24-3-1980 ஆம் தேதி

யிடப் பெற்ற 715 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு]தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

288. தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்புற நிலவரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 18-2-1981 ஆம் தேதியிடப் பெற்ற 416-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

289. சென்னையிலுள்ள தமிழ்நாடு கணக்குத் துறைத் தலைவர் அலுவலகப் பணியாளர் கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைக்கு தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் மற்றும் 1959 ஆம் ஆண்டு விதிகளின் சில சட்டம் மற்றும் விதிகளிலிருந்து விதி விலக்களிப்பது குறித்து தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின் 12-3-1981-ஆம் தேதியிடப் பெற்ற 572-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்புகள் [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

290. வருவாய்த்துறையின் 2-3-1981ஆம் தேதியன்று வெளியாகி 20-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற அரசிதழின் பாகம் III பிரிவு 1 (b), பக்கங்கள் 1-4-ல் (ஆங்கிலத்தில்) வெளியான SRO எண். 13570 (a)/80-ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப் பெற்ற திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 2-3-1981 ஆம் தேதியிடப் பெற்ற 492ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

291. தமிழ்நாடு அரசின் 1979-80-ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

292. தமிழ்நாடு அரசின் 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

293. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

294. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80ஆ ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கிலம் [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

212. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76–ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளில் நீர் வழங்கு திட்டங்கள் பற்றிய பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஏழாவது பேரவை).

213. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975-76–ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது பேரவை).

214. (தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும்]. சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1981).

215. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 621 முதல் 754 வரை)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS